திசைகள் எட்டும் படையெடுத்து எதிரி வந்த போதுமே
படை நடத்தி பகைவிரட்டி மீண்டும் எழும் எம் தேசமே
போரிடுவோம் நாங்கள் போரிடுவோம்
மண்ணில் வாழ்வதற்காய் நாங்கள் போரிடுவோம்

திசைகள் எட்டும் படையெடுத்து எதிரி வந்த போதுமே

சாவு எங்கள் மண்ணில் வந்து வலைவிரித்து போவதோ
நரபலியோ நாழுமென்று நாமே எம்மை நோவதோ
வீர ரத்தம் சிந்தினாலும் வாழ்வதென்ன சாபமோ
நாளை வானம் விடியுமென்று நம்பிக்கைகள் சாவதோ
நாளை வானம் விடியுமென்று நம்பிக்கைகள் சாவதோ

திசைகள் எட்டும் படையெடுத்து எதிரி வந்த போதுமே

ஆ ஆ. ஆ. ஆ. ஆ. ஆ

வானில் நின்று குண்டு வீழ்ந்து தேசம் என்று எரிவதோ
உயிர் சுமந்து வாழவென்று குழியிலோடிப் பதுங்கவோ
எதிரி எங்கள் உயிர் வதைக்க ஏங்கி ஏங்கி சாவதோ
பூவும் பிஞ்சும் போர்க்களத்தில் நாங்கள் தூங்கிப் போவதோ
பூவும் பிஞ்சும் போர்க்களத்தில் நாங்கள் தூங்கிப் போவதோ

திசைகள் எட்டும் படையெடுத்து எதிரி வந்த போதுமே